

அ.தி.மு.க. மாவட்ட மாணவரணி செயலாளர் இப்ராகிம்ஷா தலைமையில் 200 அ.தி.மு.க. உறுப்பினர்கள் அக்கட்சிகளில் இருந்து விலகி திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் – பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களை சந்தித்து திராவிட முன்னேற்ற கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் ஆர்.மோகன், வட்ட கழகச் செயலாளர் எஸ். சிவக்குமார், மாமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வன் ஆகியோர் உடன் இருந்தனர்.

### தாராபுரம் எஸ்.வி.செந்தில்குமார் ஏற்பாட்டில்

# நஞ்சியம்பாளையம் ஊராட்சியில் அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் முன்னிலையில்!

திருப்பூர், செப். 8 -

தமிழ்நாடு தலைசிறந்த மாநிலமாக தொடர தமிழகத்தில் ஓய்வரியாமல் உழைத்துக் கொண்டிருக்கும் ஓய்வரியா சூரியன், உலகநாடுகளேபின்பற்றும் வகையில் வியக்கத்தக்க திட்டங்களை தந்த

கழகத் தலைவர், இந்தியாவின் நம்பர் 1 முதல்வராக விளங்கும் திராவிட மாடல் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையே தேவை என்பதை உணர்ந்து திருப்பூர் மாவட்டம், தாராபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர், ஒன்றியக்குழு முன்னாள் பெருந்தலைவர் எஸ்.வி.செந்தில் குமார் ஏற்பாட்டில் தாராபுரம் புறவழிச் சாலையில் அமைந்துள்ள குமர குரு ஹோட்டல் அரங்கில் 06.09.2025 சனிக்கிழமை இன்று மாலை 4.00 மணியளவில் திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் மேற்கு ஒன்றியம், நஞ்சியம்பாளையம் ஊராட்சி அ.தி.மு.க. கிளைக் கழகச் செயலாளர், கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் கோ.ராஜன், அமராவதி அணை பாசன வாய்க்கால் சங்க முன்னாள் தலைவர் என். பழனிச்சாமி, ஊராட்சி மன்ற முன்னாள் துணைத் தலைவர் நாச்சிமுத்து, தெக்காலூர் அ.தி.மு.க கழக கிளைச் செயலாளர் மற்றும் முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர் புஷ்பா, சின்னச்சாமி, கிளை செயலாளர் ஆர். ஆறுமுகம் ஆகியோர் தலைமையில் ப.முருகேசன், மு. சத்தி, ப.கணேசன், ஆர். சரஸ்வதி, ஆர்.ஜோதிபாசு, ம. பாக்கியலட்சுமி, நா.கணேசன், க.பத்மாவதி, க.கார்த்திகேயன், கா.கலைவாணி, க.ஈஸ்வரமூர்த்தி, ஈ.செல்வி, ப.முருகேசன், மு.கவின், மு.கலாவதி, மு.கார்த்தி, சு.வேலுச்சாமி, வே.ஈஸ்வரி உள்பட 38 நபர்களும், தெக்காலூர் கிளையில் ரா.பழனிச்சாமி, ப. அண்ணாத்துரை, அ.நவினா, வ.ஆறுச்சாமி, ஆ.சிவகாமி, தி.சுரேஷ், வ.ஆறுச்சாமி, ஆ.சிவகாமி, தி.சுரேஷ், சு.நளினி, ரா.திருமூர்த்தி, தி.துளசி, வ.முருகன், மு.கரு ப்பத்தாள், செ.குணசேகரன், செ.சித்ரா, செ.லோக நாதன், லோ.லதா, வ.வீராச்சாமி, வ.சிவகாமி, வீ. மோகன்குமார், ப. மாகாளி, ப.சிவக்குமார் உள்பட 112 நபர்களும், தெக்காலூர் ஏ.டி.குடியிருப்பு பகுதியில் ஆ.வீரம்மாள், ஆ.பூபதி, சு.பொன்னுச்சாமி, பொ.லட்சுமி, ரா.குப்புச்சாமி, கு.சித்ரா, கு.சஞ்சய்க்குமார், தொ. மாயவன், மா.ராமாத்தாள், மா.முருகன், மு.சுப்பு லட்சுமி, சு.நட்ராஜ், பிரகாஷ், பி.நதியா, ம.ஜெயந்தி, maசு.லட்சுமி, மு.சரோனி, மு.மணிராஜ், ம.சந்தியா, ரா.பழனி யம்மாள், சு.பழனிச்சாமி, சா.சர்க்கரையம்மாள், தி.கோபால், கோ.பழனி யம்மாள், சி.கனகராஜ், க.தெய்வானை உள்பட 60 நபர்களும், நஞ்சியம்பாளையம் ஏ.டி.குடியிருப்பு பகுதியில் ரா.பழனிச்சாமி, ப.சித்ரா, ப.அண்ணா த்துரை, அ. நவினா, வ.ஆறுச்சாமி, ஆ.சிவகாமி, தி.சுரேஷ், வ.ஆறுச்சாமி, ஆ.சிவகாமி, தி.சுரேஷ், சு.நளினி, ரா.திருமூர்த்தி, தி.துளசி, வ.முருகன், மு.கரு ப்பாத்தாள், செ.குணசேகரன், செ.சித்ரா, செ. லோகநாதன், லோ.லதா, வ.வீராச்சாமி, வ.சிவகாமி, வீ. மோகன்குமார், ப. மாகாளி, ப.சிவக்குமார் உள்பட 106 நபர்கள் என மொத்தம் 316 பேர் தங்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் முன்னிலையில் தாய் கழகமான திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். கழகத்தில் இணைந்த அனைவரையும் நம் நெஞ்சமெல்லாம் கழகத்தின் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் சார்பிலும், இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம், இளம் தலைவர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சார்பிலும், திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பிலும், தாராபுரம் ஒன்றியக் கழகத்தின் சார்பிலும், கிளைக் கழகத்தின் சார்பிலும் வாழ்த்தி வரவேற்று அனைவருக்கும் கைத்தறி துண்டு அணிவித்து கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் திருப்பூர் மாநகராட்சி நான்காம் மண்டல குழுத்தலைவர், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், மாவட்ட துணை செயலாளர், தாராபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர், கோவை மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் கணேசன், தாராபுரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ் தனசேகர், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.சிவகுமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சன் பாலு, ஒன்றிய பொருளாளர் மாரிமுத்து, மாம்பாடி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் கே.என்.தண்டபாணி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ஆபீஸ் தோட்டம் செல்லமுத்து, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் ஆனந்தி, நாதம்பாளையம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் தண்டபாணி, மனக்கடவு ஊராட்சி மன்ற முன்னாள் துணைத் தலைவர் மங்கலம் செல்லமுத்து, குப்பிச்சிபாளையம் கிளை செயலாளர் முருகேஷ், நஞ்சியம்பாளையம் கிளை செயலாளர் அபிராமி முருகேஷ், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் கார்த்தி, ஒன்றிய ஆதிராவிடர் அணி அமைப்பாளர் சீனிவாசன், அணி துணை அமைப்பாளர் முருகன், சுண்ணாம்பு தோட்டம் ராசு, விஸ்வநாதன் உள்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தர்மபுரி கிழக்கு மாவட்டம்,கம்பம்பட்டி கோணமடுவுகாடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் புதிய கட்டிடம் கட்டும் பணியை தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் பொறுப்பாளர் கே.பி மல்லமுத்து,பி.ஜெ.பச்சியப்பன்,தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் ஆர்.ஈஸ்வர்,எம்.ஜி.எஸ்.செல்வம்,எஸ்.கே துரைசாமி,பிரபு, ராஜசேகர்,காத்தலிங்கம் கந்தசாமி, சின்னமசியன் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ் ராஜன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், துணைச் செயலாளர் சாவித்திரி, பொருளாளர் கதிரவன், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ் , மாவட்ட துணை அமைப்பாளர்கள் சக்திவேல், சங்கர், மகேந்திரன், சரவணன், லயேலா ராஜசேகர், சங்கர் உள்ளிட்ட நகர, ஒன்றிய, பேரூர் இளைஞரணியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நரசிபுரத்தில் யானை தாக்கி படுகாயம் அடைந்து மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் பத்ரகிரி என்பவரை பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி நேரில் சந்தித்து உடல் நலம் குறித்து கேட்டறிந்தார். உடன் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, வெள்ளிமலை பட்டினம் ஊராட்சி முன்னாள் மன்ற தலைவர் சுகன்யா ராஜரத்தினம் ஆகியோர் உள்ளனர்.



தஞ்சாவூர் மாவட்டம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தூய்மைப் பணியாளருக்கான நலக்குழு ஆய்வுக் கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தூய்மைப் பணியாளர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நல வாரிய அட்டைகளை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மு.ரவிச்சந்திரன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ. –பிரகாஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# கிருஷ்ணகிரியில் போக்சோ குறித்து விழிப்புணர்வு!

## அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி - அர.சக்கரபாணி சிறப்புரை!

கிருஷ்ணகிரி, செப். 8 -

பள்ளிக்கல்வித்துறை, தனியார் பள்ளிகள் இயக்ககம் சார்பாக, தனியார் பள்ளிகளின் முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (POSCO) விழிப்புணர்வு பயிற்சியை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் மதியழகன், பிரகாஷ், ஓசூர் மாநகராட்சி மேயர் சத்யா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் ,தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர். குப்புசாமி, பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் முனைவர். சுகன்யா ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தனர்.

“தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப் படும்” என்னும் வள்ளுவரின் வாக்கிற்கு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் விளக்கவுரை என்பது, தீய செயல்களால் தீமையே கிடைக்கும் என்பதால், அச்செயல்களை தீயை விட கொடுமையானவையாக கருதி அவற்றை செய்திட அஞ்சிட வேண்டும் என்பதாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தற்பொழுது இலண்டன், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குச் சென்று ஏறத்தாழ ரூ.15,512 கோடி மதிப்பில் முதலீடுகளை ஈர்த்தது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய இளைய சமுதாயத்தினர் ஏறத்தாழ 17 ஆயிரம் நபர்கள் வேலைவாய்ப்பை பெற்ற பயன் பெறும் வகையில் உள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை, தனியார் பள்ளிகள் இயக்ககம் சார்பாக, தனியார் பள்ளிகளின் முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (POSCO) விழிப்புணர்வு பயிற்சி இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை பள்ளிகூடத்தில் உள்ள தாளாளர், முதல்வர், பள்ளி ஆசிரியர்களை நம்பி தான் பள்ளிக்கு அனுப்பி வைக்கிறார்கள். அதேபோல் பெற்றோர்கள் நம் குழந்தைகளை ஆசிரியர்களிடம் ஒப்படைத்து விட்டோம், இனி அவர்கள் பார்த்துகொள்வார்கள் என்ற நம்பிக்கையில் உள்ளனர். பெற்றோர்கள் வைத்த நம்பிக்கையை உறுதிபடுத்த வேண்டும். அந்த நம்பிக்கைக்கு இடையூறாக எதெல்லாம் வருகிறது, சிலநேரங்களில் குழந்தைகளுக்கான பாலியல் தொல்லை சார்ந்த செய்திகள் வரும்பொழுது, அதுசார்ந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க POSCO சட்டம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஒரு பள்ளிக்கூட வளாகத்தில் பாலியல் குற்றம் நடைபெற்றால், விசாரணைக்காக காவல் துறை அதிகாரிகள் சீருடையில் வரக் கூடாது. ஆசிரியர்கள் உடனடியாக குழந்தையின் பெற்றோர் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிற்கு தகவல் தெரிவிக்க வேண்டும். அரசு பள்ளிகளில் மாணவர் மனசு பெட்டி வைக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் பாதுகாப்பை உறுதிசெய்ய 14417 மற்றும் 1098 ஆகிய கட்டணமில்லா தொலைபேசி எண்கள் பற்றி விழிப்புணர்வு அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு புத்தகத்திலும் இந்த எண்கள் அச்சிடப்பட்டுள்ளது. ஒருசில குழந்தைகள் தங்களது பெற்றோர்களிடம் பேசுவதற்கு அஞ்சுவார்கள். வகுப்பறையில் நன்றாக பேசி, சிரிக்கக் கூடிய மாண வர்கள் தனியாக அமைதியாக இருக்கும் பட்சத்தில் அவர்களை கண்காணித்து, அவர்களை பற்றி பெற்றோர்களிடம் பேச வேண்டும். குழந்தைகளின் மனநிலை மாறுவதை கண்டறிவது ஆசிரியர்களின் மிகப்பெரிய பொறுப்பாகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, தமிழ்நாடு முழுவதும் POSCO சட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ரூ.4.94 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 90 ஆயிரம் நபர்களுக்கு இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ள்ளது. அதனடிப்படையில்தான் இன்று இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. யாரோ பெற்ற பிள்ளை தானே என்றில்லாம், நம் பிள்ளைக்கு அந்த நிலைமை வந்தது என்று சொன்னால் நாம் எப்படி வெகுண்டு எழுவோமோ அதைவிட இரண்டு மடங்கு வெகுண்டு எழுந்து, குழந்தைகளுக்கு பாதுகாப்பு அரணாக விளங்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவிபெறும் பள்ளி, தனியார் பள்ளிகளில் படிக்கும் 1 கோடியே 29 இலட்சம் மாணவ, மாணவிகள் அனைவருக்கும் பாதுகாப்பாக இருந்திட அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும். இனி எங்கள் பள்ளியில் பாலியல் குற்ற நிகழ்வுகள் எதுவும் நடக்காத வண்ணம் செயல்படுவோம் என்று ஆசிரியர்கள் உறுதியுடன் செல்ல வேண்டும் என பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தெரிவித்தார்.

இந்தநிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் , மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம். வெங்கடேசன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் கே.வி.எஸ் சீனிவாசன், பிடிஅன்பரசன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன், சித்ரா சந்திரசேகர், இளைஞர் அணி தினேஷ் ராஜன் தனியார் பள்ளிகள் இணை இயக்குநர்கள் மார்ஸ், கணேசமூர்த்தி, பெற்றோர் ஆசிரியர் கழக மாநில துணைத்தலைவர் முத்துக் குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனிராஜ், கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.சத்யபாமா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், தனியார் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரி வளாகத்தில் (சென்னை சாலை), 12.09.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறுவதையொட்டி, மேடை மற்றும் பந்தல் அமைக்கும் பணிகளை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் சட்டமன்ற உறுப்பினர்கள் மதியழகன் பிரகாஷ் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் ,மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் , மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம். வெங்கடேசன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் இசை , மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் கே.வி.எஸ் சீனிவாசன், பி.டி அன்பரசன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன், சித்ரா சந்திரசேகர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# ஆசான்களே வணக்கம்!

ஆசிரியப் பெருமக்கள் வதியும்
திசைநோக்கித் தெண்டனிடுகிறோம்!

சூரியன் இல்லையேல்
கோள்கள் இல்லை
நீங்கள் இல்லையேல்
நாங்கள் இல்லை!

எரியும் நெருப்பில்
எத்துணை திரிகள்
பற்ற வைத்தாலும்
அது குறைவதில்லை!

பல்லாயிரம் மாணவர்க்குப்
பகுத்தறிவு கொடுத்தாலும்
உங்கள் குன்றுநிகர் அறிவு
குன்றுவதில்லை!

உங்கள் சாக்பீஸ் சத்தம்
எங்களுக்குச் சங்கீதம்!

உங்கள் கண்டிப்பு
தங்கத்தின்
தலைமேல் விழுந்த உளி!

நீங்கள்
திருத்திக்கொடுத்த தாள்கள்
எங்கள் கடவுச் சீட்டுகள்!

உங்கள் புன்னகை
தகப்பன் தராத தங்கக்காசு!

சிலபேர் இருக்கிறீர்கள்
பலபேர் இறந்துவிட்டீர்கள்
கடைசி மாணவனின்
நினைவுக்குள் இருக்கும்வரை
உங்களுக்கு இறப்பில்லை!

ஆசான்களே வணக்கம்!

(ஆசிரியர் தினத்தையொட்டி எழுதிய கவிதை)



- கவிப்பேரரசு
வைரமுத்து